

**தமிழக அரசே!**

* தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் உள்ள தமிழ்நாடு அனைத்து அருந்ததியர் (கொல்ல மாதர்கள்) பொது மடம் (செட்டில்மெண்ட் பத்திரம் எண். 1807 / 1934. பழைய சர்வே எண் 237 / 2எ, 237 / 2பி, தற்போது சர்வே எண். 237 / 1எ, 237 / 2பி) நிலத்தில் போலி ஆவணம் மூலம் ஆக்கிரமித்துள்ள ஆக்கிரமிப்பாளர்களை விரைவாக அப்புறப்படுத்தி நிலத்தை அருந்ததியர் மக்களிடம் ஒப்படைக்க வேண்டுமெனவும்



* அருந்ததியர் சமுதாய பொதுமடத்திற்கான இடத்தை போலி ஆவணங்கள் மூலம் ஆக்கிரமித்துள்ளவர்கள் மீது தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் மீதான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடு என வலியுறுத்தி

# மாபெரும் மறியல் போராட்டம்

**நாள் : 08-11-2010, திங்கள் காலை 10.00 மணி.**

**இடம் : திருச்செந்தூர் பேருந்து நிலையம் அருகில்**

*தலைமை*

*வழக்கறிஞர்.* **நீலவேந்தன்**, பொதுச் செயலர்

## ஆதித்தமிழர் பேரவை, தூத்துக்குடி மாவட்டம்

தொடர்புக்கு : 9715085702, 9715114099, 9443937063, 9942867028, 9659518575.

# திருச்செந்தூரில் ஆதிதமிழர் பேரவை சார்பாக மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

தூத்துக்குடி ஜூலை : 23

ஆதிதமிழர் பேரவை சார்பில் மாபெரும் மக்கள் திரள் ஆர்ப்பாட்டம் திருச்செந்தூரில் நடைபெற்றது. ஆர்பாட்டத் திற்கு மாணவரணி தலைவர் சண்முகவேல் வரவேற்புரை ஆற்றினார். மாநில துணை பொதுச் செயலாளர் கண்ணன் தலைமை தாங்கினார்.



திருச்செந்தூரில் நடைபெற்ற அருந்ததியர் நிலமீட்பு ஆர்ப்பாட்டத்தில் தூத்துக்குடி மாவட்ட செயலாளர் ரா.வே.மனோகர் பேசிய போது எடுத்தப்படம்.

ஆர்பாட்ட விளக்க உரையை மாநில நிதி செயலாளர் சு.க.சங்கர் ஆற்றினார். சிறப்பு பேச்சாளர்களாக மாநில துணை பொதுச் செயலாளர் தஞ்சை இளமதி மற்றும் மாநில பொதுச் செயலாளர் பலநீலவேந்தன் கூட்டத்தில் அருந்ததியர் மக்கள் நல்வாழ்வு இயக்க டி.ஆறுமுகம் மாவட்ட செயலாளர் ரா.வே.மனோகர் வழக்கறிஞர் அணி பால் முருகன் வடக்கு மாவட்ட செய்லாளர் கோவிந்தராசன் வழக்கறிஞர் அணி சாக்கிய அரசு நெல்லை மாவட்ட செயலாளர் கதிரவன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

கூட்டத்தில் திருச்செந்தூரில் அனைத்து அருந்ததியர் பொது மடத்து நிலத்தினை போலி ஆவணம் மூலம் நிலமோசடி செய்து ஆக்கிரமித்துள்ள ஆக்கிரமிப்பாளர்களை விரைவாக அப்புறப்படுத்தி நிலத்தை அருந்ததியர் மக்களிடம் ஒப்படைக்க வேண்டுமெனவும் ஆக்கிரமிப்பாளர்கள் மீது தாழ்த்தப்பட்டோர் மீதான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்கப்பட்ட மனுவின் அடிப்படையில் மாவட்ட குற்றப்பிரிவு விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமெனவும் கோரிக்கை விடப்பட்டது.

ஆர்பாட்டத்தில் தூத்துக்குடி நெல்லை விருதுநகர் மற்றும் பல்வேறு பகுதிகளிலிருந்து ஆதிதமிழர் பேரவையினர் பெருந்திரளாக கலந்து கொண்டனர். மாவட்ட மாணவரணி ஆற்றலரசு ஆர்ப்பாட்டத்தில் நன்றியுரை ஆற்றினார்.

# மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி உமாசங்கர் சஸ்பெண்ட்

சென்னை, ஜூலை.23

...உமாசங்கர். இவர், தற்போது

## நிலத்துக்கு உரிமை கேட்டு

# திருச்செந்தூரில் ஆதித் தமிழர் பேரவை ஆர்ப்பாட்டம்- வாகனத்துக்கு தீவைப்பு

ஆறுமுகனேரி, டிச.11: திருச்செந்தூரில் நிலத்துக்கு உரிமை கேட்டு ஆதித்தமிழர் பேரவையினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு ஜேசிபி வாகனத்துக்கு தீவைத்து எரித்ததுடன், கட்டடப் பொருள்களையும் சேதப்படுத்தியதால் திருச்செந்தூரில் சனிக்கிழமை பரபரப்பு ஏற்பட்டது.

திருச்செந்தூர் டிபி சாலை தனியார் திரையரங்கில் உள்ள காலிமனை தங்களுக்குச் சொந்தமெனக் கூறி தமிழ்நாடு அனைத்து அருந்ததியர் பொது மக்கள் தட்டி போர்டு அமைத்திருந்தனர்.

இந்நிலையில், சிலர் மனை தங்களுக்குச் சொந்தம் என்று கூறி வெள்ளிக்கிழமை நிலத்தை சீரமைத்து சுற்றுச்சுவர் கட்டும் பணியில் ஈடுபட்டனராம்.

தமிழ்நாடு ஆதித்தமிழர் பேரவை மாநில பொதுச் செயலர் நீலவேந்தன் தலைமையிலும், மாவட்டச் செயலர் மனோகரன், துணைச் செயலாளர் கௌதமன், ஒன்றியச் செயலர் திருப்பதி ஆகியோர் முன்னிலையிலும், ஏராளமான ஆண்கள் மற்றும் பெண்கள் தங்களுக்குத்தான் நிலம் சொந்தம் என்று சனிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



சேதப்படுத்தப்பட்ட ஜேசிபி வாகனம்.

தகவலறிந்து திருச்செந்தூர் கோட்டாட்சியர் பாக்கியம் தேவ கிருபை, காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் அப்பாசாமி, வட்டாட்சியர் சந்திரன், காவல்துறை ஆய்வாளர் இசக்கி, வருவாய் ஆய்வாளர் கோபால் மற்றும் கிராம நிர்வாக அதிகாரி பாலசுப்பிரமணியன் ஆகியோர் நடத்திய பேச்சுவார்த்தையில் சுமுக முடிவு எட்டப்படவில்லை.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரச்னைக்குரிய இடத்தில் நுழைந்து அங்கிருந்த ஜேசிபி வாகனத்தை கல் வீசி தாக்கி, தீ வைத்தனர். அங்கிருந்த சிமென்ட் மூட்டைகள் மற்றும் ஹாலோ பிளாக் கற்களையும் சேதப்படுத்தினர்.

தகவலறிந்து தூத்துக்குடி எஸ்.பி. கபில்குமார் சரத்கர் மற்றும் ஏடிஎஸ்பி ராஜராஜன் ஆகியோர் விரைந்து வந்து ஆர்ப்பாட்டக்காரர்களின் பிரதிநிதிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதில் உடன்பாடு ஏற்பட்டதால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். சம்பவ இடத்தில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# ஆர்ப்பாட்டம்

ஓட்டப்பிடாரம்,டிச.11: பசுவந்தனை அருள்மிகு கைலாசநாதர் கோயில் தெப்பக்குளத்தைச் சீரமைக்க வலியுறுத்தி இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினர் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு சங்கத்தின் கிளைச் செயலர் வி.கணேசன் தலைமை வகித்தார்.

தலைவர் கே.தங்கப்பாண்டி முன்னிலை வகித்தார்.

மாவட்டச் செயலர் த.சண்முகராஜ், ஒன்றியச் செயலர் வி.ராஜதுரை, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி ஓட்டப்பிடாரம் ஒன்றியச் செயலர் கே.பி.ஆறுமுகம் உள்ளிட்ட பலர் பேசினர்.

பொருளாளர் எம்.மாரியப்பன் நன்றி கூறினார்.

தேக்கு மரத்தோட்டம் விற்பனைக்கு
35 ஏக்கர் 10 ஆண்டுகள் வளர்ந்த தேக்கு தோட்டம், தார் பஸ் ரோடு திருநெல்வேலியிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.
9444077702
9841064552

